# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 11041/SCIC/2023</u>**

திரு.இலியாஸ்தீன் — மேல்முறையீட்டாளர்
ஜும்மாஹ் பள்ளிவாசல்,
துருகம் மெயின்ரோடு
கள்ளக்குறிச்சி-606 202.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) …. பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
கள்ளக்குறிச்சி.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 29.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.04.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 08.05.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 09.06.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 18.06.2023 |
| 6. | ஆணையத்தின் அறிவிப்பு | 24.11.2023 |
| 7. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.11.2024 |
| 8. | மனுதாரரின் ஆட்சேபணை நாள் | 18.03.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ந.க.எண்.5436-ஆ1-ஆ4-2022 நாள் 24.02.2023 தொடர்பாக பெறப்பட்ட மனுதாரரின் புகார் மனுவின் நகல் த.பெ.உ.ச.-ன் பிரிவு 2(f)ன் கீழ் நகல் தருக” என்பன போன்று 15 (பதினைந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரருடன், அவரது உதவியாளராக திரு.சையத் காதர் என்பவரும் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி ச.ரூபியா பேகம், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜராகி ஏற்கனவே மனுதாரருக்கு 25/04/2023 மற்றும் 09/06/2023 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாகவும், மீண்டும் சமீபத்தில் 09/11/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு அளிக்கப்பட்ட தகவல்களில் இனங்கள் 6, 8, 9, 10, 11, 12 ஆகியவற்றிற்கு தவறான தகவல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் பரிசீலனை செய்கையில், மேற்குறிப்பிட்ட 6, 8, 9, 10, 11, 12 ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஆவணங்களின்படியான உரிய தகவல் அளிக்கப்பட்டிருப்பதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது.**

**3. மனுதாரர் தெரிவிக்கையில் மாவட்டப் பதிவாளரின் ஆணைக்கு எதிராக தான், துணைப் பதிவுத்துறைத் தலைவர், கடலூர் மண்டலம் அவர்களிடம் மேல்முறையீடு செய்திருப்பதாகக் கூறினார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், கள்ளக்குறிச்சி அவர்கள் தற்போது 77A பிரிவு உயர்நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலும், அது குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது எனத் தெரிவித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11041/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
கள்ளக்குறிச்சி

**மேல்முறையீட்டாளர்**

திரு.இலியாஸ்தீன்
ஜும்மாஹ் பள்ளிவாசல்,
துருகம் மெயின்ரோடு
**கள்ளக்குறிச்சி**-606 202.

RG/PC